செ.வெ.எண்: 37 நாள்: 18.10.2021

**விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் முன்னிலையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் முன்னிலையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் இன்று (18.10.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தொழிற்பயிற்சி நிலையங்களில் தரப்படும் பயிற்சி வகுப்புகள், உட்கட்டமைப்பு வசதிகள், மாணவ, மாணவியர்களின் விவரங்கள், பயிற்சி வகுப்புகளுக்கு தேவையான உபகரணங்கள், ஆய்வக அறை, கணினி அறை உள்ளிட்டவைகளை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து தொழிற்பயிற்சி நிலையத்துக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளையும் கேட்டறிந்தனர்.

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் அறிவுறுத்தியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வி தரத்தினை உலகளவில் உயர்த்திடும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, பொறியியல் மற்றும் மருத்துவம் போன்று தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்தினை சிறப்பானதாக உயர்த்திடும் வகையில் தொழிற்பயிற்சியினை முடித்தவுடன் 6 மாத காலத்திற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து மாணவ, மாணவியர்களுக்கு எளிதில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை கிடைத்திடும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பும் தமிழக அரசால் ஏற்படுத்தி தரப்படுகிறது. எனவே, மாணவர்களாகிய நீங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சி வகுப்புகளை சிறப்பான முறையில் கவனித்து எவ்வித அச்சமும் இன்றி தங்கள் படிப்பினை முடித்து தொழில் வாய்ப்பினை பெற்று மற்ற மாணவர்களுக்கு முன்னுதாரனமாக விளங்கிட வேண்டும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வி தரத்தினை உயர்த்திடவும், அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கி படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதை இலட்சியமாக கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் தற்பொழுது 90 தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றது. இவற்றில் இருபத்தைந்தாயிரத்தும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்றுவருகிறார்கள். தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று வரும் அனைத்து மாணவர்களுக்கும் திட்ட வட்டமாக வேலை வாய்ப்பு கிடைத்திடும் வகையில் பல்வேறு தொழிற்நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வேலை வாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழக அரசு மேற்கொண்டுவருகிறது. மேலும், அதிகப்படியாக கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திடும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படவுள்ளது. எனவே, ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் குறைந்தது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களாவது கல்வி பயின்று வேலை வாய்ப்பினை பெறும் வகையில் அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தேவையான கூடுதல் வகுப்பறைகள், உட்கட்டமைப்பு வசதி, அதி நவீன தொழிற்பயிற்சிக்கூடம், அதிநவீன தொழிற்பயிற்சிக்கருவி போன்றவை ஏற்படுத்திடும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு.வீரராகவராவ்.இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., திண்டிவனம் உதவி ஆட்சியர் திரு.எம்.பி.அமித்.இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.